DUPLICATE

பதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

# இந்துசாதனம்

ஸ்தாபிதம் (1889) ஆவணி ௴ ௨௨ ஆரம்பமானது.

# THE HINDU ORGAN.

## குருவாரந்தோறும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

**பத்திரிக் கிரயம்.**
யாழ்ப்பாணப் பட்டினம்: ஆ 1-க்கு ரூ. 2-80
வெளியூர், இந்தியா: ,, ரூ. 4-70
தொலைவாய்ப்பகுதி: ,, ரூ. 4-70
தனிப்பிரதி: சதம் 6
முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

**விளம்பர விகிதம்.**
முதன் முறைக்கு:—ஒருகலம் ரூ. 9-40
,, அரைக்கலம் ரூ. 5-00
,, கால்கலம் ரூ. 3-15
,, ஒரு அங்குலம் சதம் 65
அடுத்த முறைகட்கு டை விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—௩௫. } யாழ்ப்பாணம்:—ருதிரோற்காரி ௵ வைகாசி ௴ ௩௨, ௧௯௨௩-ம் ௵ ஜூன் ௴ ௧௪. { இலக்கம்—௪௩.

உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிரு ளணர்ச்சி நேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றேது
மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

## சாலாமிஸ்ரி லேகியம்.

இந்தலேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்துகொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனல் பிரபுக்கள்மாத்திரமல்ல ஏழைகளும் இதனுலுண்டாகுஞ்சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்துவருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தகா, பீதாறு, காலமுன்ஸி, சப்தேமுத்ஸலி, [illegible] சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாரதாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளி பஸ்பம், அயகாந்தசிந்தூரம், சாம்பிராணிப் பதங்கம், இன்னும் அநேக புஷ்டியான மூலிவகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனல் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம், பித்த காமாலை, பித்த பாண்டு, பீனிசம், கைகால் காந்தல். வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, சூலைவாய்வு, இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமாவதுடன் சூதக வாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்தலேகியத்தின் விலை இருத்தல் ஒன்றுக்கு ரூபா ௨௦. அரைருத்தலுக்கு ரூபா ௧௦. கால்ருத்தலுக்கு ரூபா ௫. தபாற் செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொலைவாயிராச்சியப்பகுதிக்கு வீ. பி. சட்டம் இல்லாததினல் முன் மனிஆடர் அனுப்புதல் வேண்டும்.

க. ஆறுமுகம்பிள்ளை,
ஸ்ரீ சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை,
இல. 91, முகல் மருதானை,
M. 1. கொழும்பு.

## முருங்கைப்பூ லேகியம்.

இது பலத்தையும் ஆண் தன்மையையும் அதிபாலியத்தில் பலம் இழந்து தவிப்போரின் ஆயுளையும் மானத்தை யுங் காத்துப் போஷிக்கும் நிகரற்ற லேகியம். தாதுவிருத்தியும், இரத்தக் கட்டும் பலமும் கொடுப்பதில் இதற்கிணை கிடையாது.

விலை ரூ. 2-8-0.

## இஞ்சி லேகியம்

இந்தலேகியம் கண்டங்காய்ப் பிரமாணம் காலை மாலை 40 நாள் உட்கொள்ள நெஞ்செரிவு, வாய்கசப்பு ஆரோசியம், வாய்நீர் ஊறல் புளியேப்பம், அஜாஸபசி, பசியின்மை, வாந்தி, அஜீரணம், வயிற்றுநோட்டம், பித்தக்கிறாணி, பித்த வாய்வு, மயக்கம் முதலிய வியாதிகளை கண்டிக்கும்.

விலை ரூ. 1-8-0.

டி. என். சதாசிவம்பிள்ளை,
மானேஜர்,
சரவணபவானுகூல வைத்தியசாலை,
Y. 12. தஞ்சாவூர்.

## பேசெல்மிஷன் கலிக்கற் ஓடுகள்.

கலிக்கற்றிலுள்ள பேசெல்மிஷன் தொழிற்சாலையிலே செய்யப்படும் இவ்வோடுகள் பெலன், செப்பம், நிலைக்குந்தன்மை இவைகளில் ஒப்பில்லாதவாய் மற்றெல்லா ஓடுகளிலும் விசேஷமானவென்வது இத்தேசத்திலும் பிற தேசத்திலுமுள்ள நிபுணர் பலரால் ஒப்புக்கொள்ளப்பட்டது. சந்தேகப்படுவோர் சென்ற 25 வருடங்களாக மேன்மையாய் மதிக்கப்பட்டுவரும் இவ்வோடுகளால் வேயப்பட்டிருக்கும் ஏராளமான கட்டிடங்களைப் பார்க்கவும். ஓடு வாங்குந் சிநேகிதரே, வாங்குவதற்கு முன் நீங்களே ஓடுகளைச் சோதனைசெய்து பார்த்து உங்களைத் திருத்திசெய்துகொள்ளுங்கள்.

உவில்லியம்மேதர் அன் சன்ஸ்,
தனி ஏசன்றர்,
(H. 13.) (Sole Agents)

## இழந்த பலத்தைத் திரும்பக் கொடுக்கும் மன்மத கோலாகலக் குளிகை.

அநேக பரிசுகள் பெற்று உலகெங்கும் புகழ்பெற்றது. தாது புஷ்டிக்கு நிகரற்றது. ஒரே குளிகையிற்பரீக்ஷிக்கலாம். கல்லஜீரணம், ரத்த விர்த்தி, தாதுபுஷ்டி உண்டாகும். எவ்வித பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, இடுப்புவலி நீங்கும். உத்தரவாதம். 100 குளிகைக்கு ரூபா 10. 48 குளிகைக்கு ரூ. 5. 24 குளிகைக்கு ரூ. 3. மாதிரிக்கு 16 குளிகை ரூ 2.

### மாந்திரீக சத்து.

மஹானருளால் உலகெங்கும் கியாதிபெற்ற இதை அணிந்துகொண்டால் சகல வசியம், தனலாபம், தொழிலபிவிர்த்தி, கீர்த்தகாரிய சித்தி, [illegible] உண்டாகும். செய்வினை, பேய்பிசாசு நீங்கும். சத்து 1-க்கு ரூபா 2. 6சத்துகள் ரூ, 10. வீ. பி. சார்ஜ் வேறு.

C. மலையப்பசாமிப்பிள்ளை,
சித்தியானந்த மெடிக்கல்ஹால்,
Q. 37. பழனி, S. I.

# M. S. MAIDEEN ABDULKADER MARICAR,
## & Doctor, T. N. SAMIPILLAI & Co.
MUHIADEEN MEDICAL HALL,
PORTO-NOVO, S. A. Dt.

எனது அன்பர்களே. எனது அன்பர்களே
சற்று கவனியுங்கள். சற்று கவனியுங்கள்.

இனம்! இனம்!!

இந்தலேகியம்போல் பிறவைத்தியர்கள் செய்துகொடுக்கும் பக்ஷத்தில் ரூ - 1000 இனம் கொடுக்கப்படும்.

### சிட்டுக்குருவி வீரதத்துவ லேகியம்.

---*---

எனது அன்பர்களே சிட்டுக்குருவிலேகியமென்று சிலர்செய்து விற்கிறார்கள். அதாவது நரம்புகளுக்குத்தான் கொஞ்சம் வலுவைகொடுக்கும். இந்தலேகியம் அப்படியல்ல எல்லாவியாதிகளையுங் கண்டிக்கும் இந்த வீரதத்துவ லேகியத்தினுடைய மகத்துவம் புசித்தவர்களறிவார்கள். இந்தலேகியமானது செய்யும் முறையும் பாகமும் தற்காலம் ஒருவரும் செய்தும் அறிந்துமிரார்கள் அதாவது சித்தர்கள் பெரியோர்கள் பெரிய பெரிய மாதாக்களுடைய செய்யும்முறை கல்லத்தன்கள் ராஜாக்கள் செய்து சாப்பிடும் வீரதத்துவம் தங்கிய லேகியம். தங்கம் குங்குமப்பூ கஸ்தூரி அம்பர் பவழமுதலிய சிவசக்துக்களைக்கொண்டு சேகரிக்கப்பட்டது. இந்த லேகியமானது 1008 - நரம்புக்களுடைய வியாதிகளையும் சுத்தப்படுத்தி மேகவெட்டை மேகச்சூடு மேகரோகங்களை நீக்கும், எங்கள் கம்பெனிமருந்தை ஒருமுறை தருவித்து சாப்பிடும் பக்ஷத்தில் தங்கள் ஆயுள்பரியந்தம் கைவிடமாட்டீர்களென்பது நிச்சயம்.

40 நாள் ஒருமண்டலம் டப்பி 1-க்கு ரூ. 10—0—0
20 நாள் அரைமண்டலம் டப்பி 1-க்கு ரூ. 6—0—0
V. P. சார்ஜ் பிரத்தியேகம் 0—8—0

லேகியம் சாப்பிடும் முறை லேகியத்துடன் அனுப்பப்படும்.

N, B. வியாதியுள்ளவர்கள் டாக்டர் நேரில் பார்க்கவும். எங்கள் கம்பெனியில் எல்லாவிதமான லேகியங்களும் மாத்திரைகளும் தைலங்களும் திராவகங்களும் பஸ்பங்களும் சகாயவிலைக்குக்கொடுக்கப்படும்.

சிங்கப்பூர் பினங் மலாய் எஸ்டேட்களுக்கு மருந்து கிரையமும் தபால் செலவுக்காக ரூ-2-ம் முன்னதாக மணிஆர்டர் அல்லது ரிஜிஸ்டர் மூலமாக அனுப்பவேண்டியது அப்படி அனுப்பாவிட்டால் அனுப்பப்படமாட்டா.

எங்களுடைய கம்பெனிக்கு கமிஷன் ஏஜண்டு தேவை. தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

(தந்தி விலாசம்—முஹையதீன்.)

மானேஜர். எம். எஸ். மெய்தீன் அப்துல்காதிர் மரைக்காயன்,
& டாக்டர் டி. என். சாமிப்பிள்ளை & கோ.
Y. 11. முஹையத்தீன் மெடிக்கல் ஹால், பரங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா.

# இலங்கையிலிருந்து ஒருவிளம்பரம்.



## அற்புதமான ஔஷதம்.

ஆயுர் வேத
ரதிவல்லப மோதக.
விலை 30-க்கு ரூபா 2 சதம் 50
அல்லது



ஆச்சரியம்! ரூபா 2 அணு 8. ஆச்சரியம்!

ஒருவேளை மருந்தில் குணந்தெரியும். இந்த மருந்தானது சகலவித மேகச்சூடு, பித்தச்சூடு, முதலான உஷ்ணங்களைச் சுகமாக்கித் தாதுபுஷ்டி, சரீரபுஷ்டி, முகவசீகரம், தேககாந்தி, மூளைக்குப் பலங்கொடுப்பதுடன் நரம்புத்தளர்ச்சி, அக்கினிமந்தம், மலச்சிக்கல், பசியின்மை முதலான வியாதிகளைச் சுகமாக்கும் தேவாமிர்தமாகும்.

## ஆயுர்வேத தைலம்.

ஆச்சரியமான மருந்து
ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டிய மருந்து.

## இதை ஒருமுறை உபயோகித்துப் பாருங்கள்.

விலை சொற்பம்! குணம் அதிகம்!

**இந்தமருந்தை வெளியேதேகத்தில் பூசுவதினல் குணமாகும் வியாதிகள்:**

(1) தலைவலி, கபாலஇடி, பிடரிவலி, ஜலதோஷம், நெஞ்சுவலி, மாரபடைப்பு, இருமல், கக்கிருமல், ஒருத்தலைவலி, வாந்தி முதலிய வியாதிகளும்;

(2) வாய்வுவலிகள், நரம்புவலிகள், பிடிப்புகள், சுளுக்குவலிகள், கை கால் குளிர்ச்சி, கெண்டை இழுத்தல், வயிற்றுவலி, வாந்திபேதி, காலங்களிலுண்டாகிற சகலவியாதிகளும்;

(3) வாய்வு, இடுப்புவலி, முழங்கால்வலி, கணுக்கால்வலி, கைவலிகள், உளைச்சல்கள், வாதம் 80 வகைகளும்;

(4) பல்வலி, பல்லரணை, கன்னவீக்கம், கட்டிகள், புறப்பாடுகள், மொழிவீக்கம், ரத்தக்கட்டு, சதைபிரட்டல் முதலியவைகளும்;

(5) தேள்கடி, பூரான்கடி, எலிக்கடி, விஷக்கடிகள், சிறு குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் உண்டாகிற இன்னும் அநேக வியாதிகள்; இந்த மருந்தை நோயுள்ள பாகங்களிற் பூசினதும் சுகமாகும். விலை சீசா 1-க்கு ரூபா 1—0—0.

பினங்கு, சிங்கப்பூர், கிள்ளான், குவாலாலம்பூர், பேரா முதலிய பிறதேச வாசர்கள் மருந்தின் கிரயமும் தபால்சார்ஜ ரூபா 1 அணு 8 அல்லது ரூபா 1 சதம் 50 சேர்த்து முற்பணமா யனுப்பி மருந்து பெறவேண்டும். வை.பூரார் வி. பி. யில் அனுப்பும்படி எழுதுங் கடிதங்கள் அங்கீகரிக்கப்படமாட்டா.

N. B. ஆடர் எழுதும் நண்பர்கள் தமது விலாசம் இங்கிலீஷில் கூட்டெழுத்து இல்லாமல் எழுதவேண்டும். இது கவனிக்கவும்.

இனம்! இனம்!! இனம்!!!

ஆடர் அனுப்புகிறவர்களுக்குப் பெரிய கேட்லாக்கும் 1923-ம் வருடக் கலண்டரும் இனுமாகப் பார்சலுடன் அனுப்பப்படும்.

மேல்விலாசம்:—
A. டாக்டர். எம். சந்திரசேகரம்,
ஆயுர்வேத வைத்தியசாலை,
Y. 13. H. குருணக்கல், சிலோன்.

## சுவர்ண அம்ருதம்.

பஞ்சபாண்டவர் தபசுசெய்த சஞ்சீவி மலையாகிய கொடைக்கானல் மலையில் ஒரு மகானல் கொடுக்கப்பட்ட, வனமூலிகைகளாலான, வைத்திய கிருஷ்ணன் என்பவருடைய ஔஷதம்.

சகல விதமான ஜுரங்கள், தலைவலி, காலரா, பிளேக், மார்ச்சளி, ஜலதோஷம், கல்கள் பிடிப்பு, பல்வலி, க்ஷயம், இருமல், வீக்கம், சுளுக்கு, ஊரல், சொறி சிரங்கு, அஜீரணம், வயிற்றுவலி, வயிற்றுப்போக்கு, ஜன்னி முதலிய வியாதிகளை ஆச்சரியப்படும்படி குணப்படுத்துகிறது.

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு தபால்சார்ஜ் உள்பட புட்டி ஒன்றுக்கு விலை ரூபா 2—0—0.

மானேஜர்,
சுவர்ண அம்ருதம் டிப்போ,
கொடைக்கானல், P.O.
H. 11. (தென் இந்தியா.)

உலகெங்கும்புகழ்பெற்றநற்சாட்சிகள்பெற்றது
தாதுபுஷ்டிக்குகைகண்ட
## ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.

ஒரு முறை தருவித்துப் பாருங்கள்!!

தாதுபுஷ்டிக்கு இதற்கு நிகரானது ஒன்றுமில்லை. பரீக்ஷைக்கு ஒரே குளிகை போதும்; இழந்துபோனபலத்தை திரும்பக் கொடுக்கும்; நரம்புத் தளர்ச்சியடைந்து வருந்துவோர்க்குத் திவ்விய ஔஷதம். இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தை தருவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை.

150 பில்ஸ் ரூ 10. 50 பில்ஸ் ரூ. 4-0-0
20 பில்ஸ் ரூ. 2. வி. பி. சார்ஜ் வேறு.

### பிரமேக நிவாரணி.

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்திசெய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை, நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம், உடனே நிற்கும். 1-புட்டி ரூ. 2

### பிளேக் மாத்திரை.

கரம்கட்டி கண்டவுடனே ஒரு மாத்திரை சாப்பிட்டால் 2 மணி நேரத்தில் சுரத்தை நிறுத்தும்; ஜன்னி தோஷம் வராது. புட்டிக்கு ரூ. 2. கட்டிக்கு பிளாஸ்திரி ரூ. 1.

T. R. கருப்பண பிள்ளை,
(Q. 36) வைத்தியசாலை, பழனி, S. I.

## தேக்கமரம்.

திறமான பர்மாதேச தேக்கமரத் திராந்திகள். நீளம், 10 அடி தொடக்கம் 35 அடி வரையிலுள்ளன. கனம் 12 அங்குலந் தொடக்கம் 18 அங்குலம் வரையிலுள்ளன. இவைகள் எம்மிடத்தில் விலைக்குக் கிடைக்கும்.

S. வீரசத்திப்பிள்ளை,
தொண்டமானாறு.

(H. 16)



# இந்து சாதனம்

யாழ்:—ருதிரோற்காரிஸு வைகாசி௴ 32உ


## "இன்னும் வன்மமா? ஊன்றி யோசியுங்கள்."

இம்மகுடாமத்துடன் "காரை, எம். எஸ்." அவர்கள் இவ்விந்துசாதனப் பத்திரிகையின் அபிவிருத்தியைக் குறித்து எழுதிய கடிதத்தை இற்றைப் பிரசரத்திற பிறிதோரிடத்தில் வெளியிட்டிருக்கின்றேம். காரை, எம். எஸ். அவர்கள் இப்பத்திரிகை ஆரம்பமான காலந் தொடக்கம் இற்றைவரையில் இதன்மீது அதிக அபிமானம் பாராட்டி வருபவர். இந்துசாதனத்தின் வரலாற்றை நன்கு அறிந்துள்ளவர். பலவருடங்களாக, இடையீடின்றி இப்பத்திரிகைக்கு அரிய விஷயதானஞ் செய்து வந்தவர். அக்காலங்களில் இவர் எழுதிவந்த விஷயங்களெல்லாம் பத்திரிகாபிமானிகளாற் பெரிதும் பாராட்டப்பட்டு வந்தன. சிலகாலமாக, காரைநகரின் வித்தியாபிவிருத்தி விஷயமாக உழைப்பதில் இவர் பெரிதும் ஈடுபட்டிருத்தல் காரணமாக, விஷயதானஞ் செய்வதற்கு நேரமில்லா தொழிந்தமையினாலும், இப்பத்திரிகைக்கு இக்காலத்திற் பல சகோதரர்களும் சகோதரிகளும் அரிய விஷயங்களை எழுதியுதவிவருதலினாலும் தாம் விஷயதானஞ் செய்யா தொழிந்தனர். ஆனால் இப்பத்திரிகை விஷயமாக இவர் கொண்டிருக்கும் அபிமானம் காலத்திற்குக்காலம் மேலிட்டுவருகிறதன்றிக் குன்றவில்லையென்பது இவர் இப்பொழுது எழுதியுள்ள கடிதத்தால் இனிது புலனாகும். தற்போதைய பத்திரிகாசிரியரைப்பற்றி அவரால் வியந்தெழுதப்பட்ட வாக்கியத்தை யாம் உபசாரமாகக் கொள்ளுகின்றோமன்றி, உண்மையெனக் கொண்டிலேம்; ஏனெனில் வயசாலும் அநுபவத்தாலும் அறிவாலுங் குறைந்த யாம அவர்கூறியவற்றை உண்மையென ஏற்றுக்கொள்வதற்கு அருகரல்லேம். தமிழ்மக்களின் ஈடேற்றத்திற்கு அநுகூலமான விஷயங்களைப் போதித்தும் பிரதிகூலமான கருமங்களைக் கண்டித்தும் இயன்றவரையில் இப்பத்திரிகை வாயிலாக வெளியிட்டுவருகின்றேம். இங்ஙனம் எழுதிவருங்கால் தவறுகளும் அபிப்பிராயபேதங்களும் ஏற்படுதல் சகசம். ஆனால் அவை நன்னோக்கத்துடன் எழுதப்படுதலினால் அபிமானிகள் அக்குறைகளைப் பொருட்படுத்தா தொழிதல் அவர்கண்மேற்பொறுத்தகடனாகும். நிற்க.

இவ்விந்துசாதனத்தை வாரமிருமுறை வெளியிடவேண்டுமென்னும் அபேட்சையுண்டாகி இருவருடங்களாகியும் இன்னும் அவ்வபேட்சை பூர்த்தியாதற்குக் காலம் கிட்டாதிருத்தல் மனவருத்தத்திற்கிடமாம். இப்பொழுதும் ஏனைய பத்திரிகைகளைப் பின்பற்றி இதனையும் வாரமிருமுறை வெளிவரச் செய்தல் அரிதான கருமமன்று. ஆனால் பொருள்விஷயத்தை ஸ்திரப்படுத்திக்கொண்டு பத்திரிகையை வாரமிருமுறை வெளியிட ஆரம்பிப்பின் யாதும் இடையூறின்றிப் பத்திரிகை இனிது நடைபெறுமென்னும் எண்ணம் பற்றியே காலதாமசஞ் செய்கின்றேம். பத்திரிகாபிமானிகளால் வரவேண்டிய பணத்தைப் பாக்கியின்றி அவர்கள் அனுப்பிவைப்பரேல், அதுவே நாம் எண்ணிய கருமங் கைகூடுவதற்குப் பெரும் உபகாரமாகும். அதனையின்றிப் பிரத்தியேகமாக ஏதுந் திரவியசகாயஞ் செய்யும்படி யாம் எவரையும் வேண்டிநிற்கவில்லை.

மேலும் இப்பத்திரிகை, உள் ஒரு நோக்கம் வைத்து, வெளியே பிறிதொரு நோக்கங்காட்டி, குறித்தசிலரை நிந்திக்கவும், வேறுசிலரை வந்திக்கவும், குரோதந் தீர்க்கவும் எழுந்ததன்றென்பது அக்காலந்தொடக்கம் இற்றைவரையில் இதனை நிரையமாக ஏற்று வாசித்துவருபவர்கட்கு நன்கு விளங்கும். காரை எம். எஸ். அவர்கள் சொல்லுகிறபடி இது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் உள்ளத்தில் உற்பத்தியாகி, ஸ்ரீ செல்லப்பாபிள்ளை, வியாயதுரந்தரர் ஸ்ரீ நாகலிங்கம், ஸ்ரீ புசுபதிச்செட்டியார், ஸ்ரீ சபாரத்தினமுதலியார், ஸ்ரீ [illegible]லாயபிள்ளை, ஸ்ரீ சபாபதி முதலிய [illegible]மானிகளால் ஆரம்பிக்கப்பட்டு யாழ்ப்[illegible]ணம் சைவபரிபாலனசபையாராற் ப[illegible]விக்கப்பட்டு, தமிழபிமானிகளால் ஆத[illegible]துப் போஷிக்கப்பட்டு எல்லாம்வ[illegible] இறைவன் திருவருளையிட்டு இனிது ந[illegible] பெற்று வருகின்றது. இக்காலத்தில் [illegible]சியல் விஷயமாகவும் நமது சமய வி[illegible]மாகவும் தேசம் பாஷை சாதி என்[illegible] இவ்விஷயங்களின் பொருட்டும் இவ்வி[illegible]சாதனம் பெரிதும் உழைக்கவேண்டியேற்பட்டிருக்கின்றது. இங்ஙனமிருத்தலால் பத்திரிகாபிமானிகள்வாளாவிராது இதன் விருத்திக்காக வேண்டிய உதவி புரிதல் வேண்டும். சைவபரிபாலன சபையாரும் மடிமையின்றி இப்பத்திரிகை விருத்தியின்பொருட்டு வேண்டிய முயற்சிகளை விரைவிற் செய்தல்வேண்டும்.

### தேசாதிபதியவர்கள் யாழ்ப்பாணத்தைத் தரிசித்தமை.

இலங்கைத் தேசாதிபதியாகிய ஸேர் வில்லியம் ஹென்றிமனிங் அவர்கள், இன்று தொடக்கம் மூன்றுநாட்களுக்குக் கச்சேரிப் பூந்தோட்டத்தில் நடைபெறவிருக்கும் யாழ்ப்பாணக் கைத்தொழில் - கமத்தொழிற் பொருட்காட்சிக் கொண்டாட்டத்தை ஆரம்பிக்கும் நோக்கமாகத் தமது பாரியாருடன் விசேஷ புகைரதமார்க்கமாகக் கொழும்பிலிருந்து புறப்பட்டு, நேற்று காலை மணிவரையில் யாழ்ப்பாணப் புகைரதஸ்தானத்தில் வந்திறங்கினர். வடமாகாண ஏஜண்டர் முதலாம் உத்தியோகத்தர்களும் பிரபுக்களும் சனத்தலைவர்களும் மற்றுஞ் சனங்களும் அவரை வரவேற்று உபசரித்து மேளவாத்தியம் முதலிய சகல ஆடம்பரங்களோடும் அழைத்துக்கொண்டு முற்றவெளியிலுள்ள றிஜ்வேமண்டபத்திற்குக் கொண்டு சென்றனர். புகைரதஸ்தானந் தொடக்கம் றிஜ்வே மண்டபம் வரையிலுள்ள தெருவீதி அழகுற அலங்கரிக்கப்பட்டிருந்தது. உபசாரணைச்சங்கத்தார் விதித்த விளம்பரததிற்கிணங்கி, றிஜ்வே மண்டபத்தில் எண்ணிறந்த பிரபுக்களும் மாதருஞ் சமூகமாயிருந்தனர். தேசாதிபதியவர்கள் பாரியாருடன் ஆங்கு அமர்ந்த பின்பு வடமாகாணப் பிரதிநிதியாகிய கௌரவஸ்ரீ துரைசுவாமியவர்கள், யாழ்ப்பாணத்தவர்களின் பொருட்டு ஒரு வந்தனோபசாரப் பத்திரத்தை அவருக்கு வாசித்தனர். தேசாதிபதியவர்கள் அதன்பின் எழுந்து, யாழ்ப்பாணத்தவர் தமக்குச் செய்யும் உபசாரத்தின்பொருட்டுத் தாம் நன்றி கூர்வதாக விடையளித்தனர். (தேசாதிபதியவர்கட்கு வாசிக்கப்பட்ட உபசாரப்பத்திரமும் அதற்கு அவர்கூறிய விடையும், இடமின்மையால் இம்முறை இப்பத்திரத்தில் வெளியிடப்படவில்லை. அடுத்தவாரப் பிரசரத்தில் மொழிபெயர்த்து வெளியிடுவோம்). மாலை 6 மணி வரையிற் கூட்டம் முடிந்தது. தேசாதிபதியவர்கள் இன்று பகல் 2 மணி வரையில் மேற்படி பொருட்காட்சியை ஆரம்பிப்பர். இன்று மாலை யாழ்ப்பாணக் கச்சேரித் தோட்டத்தில் வாண வேடிக்கையும் வேறுபலவகையான கொண்டாட்டங்களும் நடைபெறும். நாளை (வெள்ளிக்கிழமை) பின்னேரம் தேசாதிபதியவர்கள் கொழும்பு நகரத்திற்கு விசேஷ புகைரத மார்க்கமாக மீண்டு செல்வர்.

### மாண்டவன் மீண்டமாயம்.

இம்மகுடாமத்துடன் இற்றைப் பிரசரத்தில் இந்திய சமாசாரத்தின்கீழ் ஒரு நூதனமான சம்பவத்தை வெளியிட்டிருக்கின்றேம். இந்தப்புதினஞ் சென்ற திங்கட்கிழமை வெளிவந்த கொழும்பு "டெயிலி நியூஸ்" என்னும் பத்திரிகையில் விசேஷ புதினமாக வெளியிடப்பட்டிருக்கின்றது. அவ்வட்டத்தனமான அந்த டக்டரைப்பற்றியும் மற்றும் வஞ்சகர்களைப்பற்றியும் பின்னர் யாதுங் கூறப்படவில்லை. இப்படியொரு சம்பவம் நிகழ்ந்தமை உண்மையென்பது கோட்டுத் தீர்வையைக்கொண்டே அறியத்தக்கதாகவிருக்கின்றது. ஆனால் இப்படிப்பட்ட சம்பவங்களை "நவல்ஸ்" என்று சொல்லப்படும் இக்காலக் கற்பனா சரித்திரங்களிற் படிக்கின்றேமேயன்றி உண்மையாக நடந்திருப்பதை முன்னொருபோதும் யாம் கேள்விப்பட்டதில்லை. இருபதாம் நூற்றாண்டிலே ஆங்கில பரிபாலனகாலத்திலே இந்தியா முழுவதற்கும் தலைநகராக அக்காலத்திருந்த கல்கத்தாவிற் களிந்தாகவுள்ள விசேஷ பட்டினமாகிய "டாஜீலிங்" என்னுமிடத்திலே இப்படிப்பட்ட ஒரு அபூர்வமான சம்பவம் நிகழ்ந்திருத்தல் புதினத்திற் புதினமல்லவா. இவைகளை யெண்ணியே யாம வாரந்தோறும் "உலகம் பலவிதம்" என்று சொல்வது.

## உலகம் பலவிதம்.

றிக்ஷோ வண்டியில் ஏறிச் செல்பவர்கள் சில சமயங்களில் தமமை இழுத்துச்செல்லும் றிக்ஷோக்காரருடன் வார்த்தையாடிக்கொண்டு செல்வதும் வழக்கம். ஒருநாள் ஒரு தமிழ்த் துரை றிக்ஷோ வண்டியிலேறிக்கொண்டு நெடுந்தூரம் போகும்போது றிக்ஷோக்காரனை நோக்கி "என்னடா விசேஷம்" என்று கேட்டார். அவன் "ஒன்றுமில்லையையா, ஆனால் இந்த உலகம் தங்களையொத்த பணக்காரருக்காகத்தான் உண்டாக்கப்பட்டிருக்கின்றது" என்றான். துரை "ஏனடா அப்படிச் சொல்லுகின்றாய்" என்று கேட்டார். "வேறொன்றுமில்லை ஐயா, இந்த வெய்யிலுக்கு, நாங்கள் செய்கிற இந்த வேலைக்கும், அந்தக் கள்ளுத்தண்ணீர் இல்லாவிட்டால் முடியாது; இப்போதோ பொழுதுபட்டு ஏழுமணிக்குமேயிருக்கும்; கள்ளுத்தவறணையெல்லாம பூட்டிப்போடுவார்கள்; முன்னே என்றால், வீட்டிலுள்ளவர்களிடஞ் சொன்னால் அவர்கள் வாங்கிவைத்திருப்பார்கள்; நாங்கள் எங்கள் பிழைப்பை முடித்துக்கொண்டுபோய் சாமஞ்சென்றாலும் அதைக் குடிக்கலாம். ஆனால் இந்தநாளையில் அப்படி வாங்கிவைத்துக் குடிக்க முடியாது. நாங்கள் ஏதும் குடிக்கவேணுமென்றால் எங்கள் வேலையை விட்டுவிட்டு இரண்டுகட்டை தூரத்திற்குத் தவறணைக்குப் போகவேணும். இதுக்கிடையிற் பிழைப்புக் கெட்டுப்போம். ஏழைகளான எங்களுக்குத்தான் கவுண்மேந்து கட்டளைச்சட்டம பார்க்கிறது" என்றான். "எட, நீ சொல்லுகிறது சரிதான்; ஆனால் இந்த உலகம் பணக்காரருக்காகத்தான் உண்டாக்கப்பட்டிருக்கின்றதென்று முந்திச் சொன்னாயே, அதின் கருத்தென்ன?" என்று பிரபு கேட்டார்.

* * *

"இல்லாமற் பின்னை வேறு என்ன ஐயா, நாங்கள் ஏதுங் குடிக்கில் எங்கள் பிழைப்பை விட்டுத் தவறணைக்குப் போகவேணும்; நீங்கள் குடிக்கவேணுமானால் வீட்டிலே இருந்துகொண்டு இரகசியமாக உங்கள் வேலைக்காரரையுங் காசையும் சாப்புக்கு அனுப்பினால் பிறண்டியோ உவிஸ்கியோ ஜின்னோ வேறென்னவோ எத்தனை டசின் போததல் வேண்டுமென்றாலும் உடனே உங்கள் வீட்டிற்கு வந்து சேரும். நீங்கள் இரகசியமாகக் குடிக்கலாம. உங்கள் வீட்டுத் தேவைக்கும் எடுத்துக்கொள்ளலாம். வெள்ளைக்காரத் துரைமாருடைய் குடிவகையானபடியாலேதானே கவின்மேந்தும் இப்படிச் செய்கிறது. நாங்கள் ஏழைகளானபடியாலே வாறியத் தேசமறியப் போய்க் குடித்துவிட்டு வரவேண்டியிருக்கிறது. இதுக்காகத்தான் நயினை, உலகம் பணக்காரருக்காக உண்டாக்கப்பட்டது என்றேன். "நீ சொல்வதும் சரிதானடா, ஆனால் இவையெல்லாம் உங்களுடைய நன்மைக்காகத்தானே. நீங்கள் குடித்துக் கெட்டுப்போகக்கூடாதென்பதே எங்களுடைய நோக்கமும் அரசினருடைய நோக்கமும்" என்றார். "நயினாரே, நாங்கள் கெட்டுப் போகக்கூடாது; நீங்கள் கெட்டுப்போகலாமோ; படித்த உங்களோடு பறையன் நியாயம் பேசுகின்றானென்று குறை நினைக்கவொண்ணாது; நாங்கள் பார்க்கிற பிழைப்பு இந்த றிக்சோ இழுக்கிறது; மயக்கம் அதிகப்பட்டால் விட்டுவிட்டுப் பேசாம இருப்போம்; நயினாரேதுரைவழி பார்க்கிற கடமையிலே ஒரு பிழை வந்தால் அது நயினாருக்குமாகாது, ஊருக்குமாகாது. அல்லாமலும் பாருங்கள் நாங்கள் தவறணையிலே போய்க் குடித்துவிட்டு வந்தால், ஒருவேளை சாப்பாத்திக்குமாத்திரம் தான் குடித்துவிட்டு வந்திருக்கிறேனென்று தெரியும். அவள் குறிப்புக் கண்டு சோறு போடுவாள், தின்றுவிட்டுப் படுத்தால் விடியத்தான் எழும்புவோம். நயினாரைப் போலவுள்ள ஆட்கள் தாங்கள் குடிக்கிறது மிக இரகசியமாகவிருக்குமென்றாம், ஆனால் அது வேலைக்காரருக்குத் தெரியும்; வீட்டிலே அம்மாவுக்குந் தெரியும். நயினாருடைய பிள்ளைகளுக்கும், போத்திலை எடுக்கவைக்க மெள்ளமெள்ளத் தெரியவரும்; அவர்களும் மெள்ளமெள்ளப் பழகிக்கொள்ளுவார்கள். ஆனபடியால் நாங்கள் இனிக் கெட இடமிருந்தாலல்லவோ கெடுகிறது. நாங்கள் முற்றாய்க் கெட்டுப்போனோம். கெட்டாலும் பறையர்தானே; குலக்குடியிலேயுள்ள நயினாரைப்போலொத்தவர்கள் நல்லாயிருக்கவேணும்; அப்போதுதான் நாங்களும் தங்களை அண்டிப் பிழைக்கலாம். பறையன் இப்படிச் சொல்லுகிறான் என்று குறைநினைக்கக்கூடாது" என்றான். இதற்கிடையில் பிரபுவின் வீடு சமீபிக்க றிக்ஷோக்காரன் கதையை நிறுத்திக்கொண்டான்.

## சமாசாரம்.

காலநிலை:-கடுங்காற்று வீசுகின்றது. மழைக்கோலங் காணப்படுகின்றது. ஊர்ச்சுகம் பெரும்பான்மையும் குறைவில்லை.

நல்லூர் சந்திரசேகர விநாயக ராலயம்:— இவ்வாலயத்தின் ஆனி௴ 5-உ செவ்வாய்க்கிழமை துவஜாரோகணமாகி உற்சவங்கள் சிறப்புற நடைபெறும் 14-உ வியாழக்கிழமை ரதோற்சவமும் தீர்த்தோற்சவமும் நிகழும்.

புலோலிப் பசுபதீஸ்வரர் மகோற்சவம்:— இப்புராதன சிவாலயத்தில் இந்த வைகாசி௴ 24உ புதன்கிழமை துவஜாரோகணமாகி மகோற்சவம் நடைபெறுகின்றது. ஆனி௴ 6உ புதன்கிழமை இரதோற்சவமும் அடுத்த தினமாகிய உத்தர புண்ணிய தினத்தன்று தீர்த்தோற்சவமும் நிகழும்.

சுந்தரவன மகோற்சவம்:—இந்தத் தலத்திலே நிகழும் ருதிரோற்காரிஸு வைகாசி௴ 32உ குருவாரம துவசாரோகணமும், ஆனி௴ 13உ புதவாரம் ரதோற்சவமும், 14உ குருவாரம் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

பரிசளிப்புக் கொண்டாட்டம்—:இந்த ருதிரோற்காரிஸு ஆனி௴ 2உ (16-6-23) சனிக்கிழமை இரவு 7 மணிதொடக்கம் திருநெல்வேலிச் சைவவித்தியாசாலையின் பரிசளிப்புக் கொண்டாட்டம் மேற்படி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறுமென அறிபலானோம்.

யாழ்ப்பாணஆயுள்வேதவிருத்திச் சங்கம்:— சென்ற ஜனவரி௴ 3உ யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபத்திற்கூடிய ஆயுள்வேத வைத்தியர் மகாசபையில, யாழ்ப்பாணத்திலே ஆயுள்வேத வைத்தியத்தை விருத்தி செய்வதற்காக, குறித்த "ஆயுள்வேத விருத்திச் சங்கம்" ஸ்தாபிக்கப்பட்டது. இக்கூட்டக் குறிப்புகள் விரிவாக அடுத்த பிரசுரத்தில் வெளியிடப்படும்.

காரைதீவு இந்துவாலிப சங்கம்:—இச்சங்கத்தின் எட்டாம வருடாந்தக்கூட்டம் வருகிற ஆனி௴ 9உ (23—6—23) சனிக்கிழமை பிற்பகல் நாலுமணியளவில இச்சங்க பக்கசாலயத்திற்கு முன்பாக அமைக்கப்பட்டிருக்கிற பந்தரில் நடைபெறும். அத்தருணம ஸ்ரீமான். சு. சிவபாதசுந்தரம்பிள்ளை B. A. அவர்கள் "சைவசமயம்" என்னும் விஷயமாகச் சிறந்த பிரசங்கஞ் செய்வார்.

புகைரதவிபத்தில் அகப்பட்டவர்கட்குச் சகாயஞ்செய்தல்:—மதவாச்சிப் புகைரதவிபத்தில் அகப்பட்டவர்களும் அகப்பட்டு இறந்தவர்களின் உருமைக்காருமாகிய 15 பேர் தங்களுக்கு நஷ்டஈடு தரும்படி இலங்கை அரசினர் தனுதிகாரிக்கு மனுப் பண்ணியிருக்கின்றனர். இலங்கைத்தோட்டப்பகுதிச் சங்கத்தாரும் தங்களுக்கென இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட கூலியாளருள இவ்விபத்தில அகப்பட்டவர் பொருட்டு நஷ்ட ஈடுவாங்கிக் கொடுப்பதற்கு வேண்டிய முயற்சிகள் செய்கின்றார்கள். இந்த விஷயம் இனிவரும் சட்டநிரூபண சபைக் கூட்டத்தில் முடிவுசெய்யப்படுமாம்.

யாழ்ப்பாண மதுபரிபாலன ஆலோசனைச் சங்கம்:—இந்த ஜூன்௴ 12உ செவ்வாய்க்கிழமை கூடிய இவ்வாலோசனைச்சங்க கூட்டத்தில் யாழ்ப்பாண நகர பரிபாலன சங்க 7-ம் வட்டாரத் தெல்லைக்குள் இருக்கும் 6-ம் 7-ம் நம்பர் கள்ளுத் தவறணைகளையும, 3-ம் நம்பர் சாராயத் தவறணையையும் விலக்குதற்குச் சம்மதங் கொடுக்கவேண்டிய இடங்களுள் கொக்குவில் மேற்குச் சேர்க்கப்படக்கூடாதென்ற தீர்மானம் அங்கீகாரம் பெற்றது. இக்கூட்டத்தில நகர பரிபாலன சங்க அக்கிராசனர் ஸ்ரீ ஆ. கனகரத்தினம் அக்கிராசனம் வகிக்க ஸ்ரீ மு. ஆசைப்பிள்ளை, ஸ்ரீ C. N. தேவராசன ஆகிய அங்கத்தவரும், வடமாகாண ஏசண்டரும், மதுபரிபாலன உதவித் தலைவரும் சமூகமாயிருந்தனர்.

50 றூத்தல்நிறையுள்ள தேங்காய்:-தெனாறத்கொடையில் 1912-ம் ஆண்டு நடப்பட்ட இரட்டைத் தென்னம்பிள்ளை யொன்றிலிருந்து ஐந்து தேங்காய் பிடுங்கியிருக்கின்றனர். இதில தோலோடுகூடிய ஒருதேங்காயின் நிறை 50 றூத்தலாம். இரண்டுதேங்காய் நூதனசாலையில் வைத்தற்காக உலரப்போடப்பட்டிருக்கின்றன. ஏனைய மூன்றுந்தேங்காய்களும் பெரிதேனியாத் தோட்டத்தில புதைக்கப்படுமாம்.

களனிகங்கைப் பிரவாகம்:— சிலதினங்களாக மலைநாட்டிலே பெருமழை விடாமற் பெய்து வந்தமையினால் களனிகங்கை பெருகலாயிற்று. அதனால் கொழும்பில் ஆற்றோரமாகவுள்ள சிலகிராமங்கள் நீர்வாய்ப்பட்டன. பதிந்த இடத்தில் வசித்தவர்கள் எத்தனையோ பேர் நீர்ப்பிரவாகம் காரணமாகக் குடிபெயரம்பவேண்டியவராயினர். இதனாற்பயிரழிவும் அதிகமாயது. சீதாவத்தைதொட்டு மூன்றடி வெள்ளத்திற்குக் கீழ்யிருக்கின்றது. நீர்கொழும்பிற்குச் செல்லும் தெருவும் வெள்ளத்துள் அகப்பட்டுப்போற காணப்படுகின்றது. பம்பலப்பிட்டியாப்பகுதியிலும் பெரும்வெள்ளப் பிரவாகம் காணப்படுகின்றது. பொறலைகெடிரு இப்பொழுதும் வெள்ளப்பிரவாகத்திற் கிடக்கின்றது. இதனாலே புகைரதப்போக்கு வரவு முற்றாகத் தடைப்படாவிட்டாலும் தாமதப்படுகின்றது. நேற்றுவரையில் வெள்ளப்பிரவாகம் குறைந்து வருகின்றதென அறியலானோம்.


## தேவை! தேவை!!

கட்டுபிக்கையான ஒரு வேலைக்காரப் பெண் தேவை. கீழ்ச்சொல்லும் விலாசத்திற்கு எழுதவும்.

மிஸிஸ் சந்திரசேகரம்,
குருநாக்கல்,
Mrs. Santherasekaram,
Kurunegala,

(M. 25.)

செல்ல விரும்புவதில்லை. எக்கவீட்டிற்பார்த்தாலும் எந்தப்பெண்ணைப் பார்த்தாலும்; எதைப் பார்த்தாலும் இந்தப்பயனற்ற புஸ்தகங்களே முன்னுக்கிருக்கின்றன.

பெற்றோரே! விழித்துக்கொள்ளுங்கள். உங்கள் மக்கள் விருத்தியை விரும்பின் இந்தக்கதைகளைத் தொடவிடாதிருங்கள். ஒவ்வொருவர் வீட்டிலும் ஒவ்வொருவர் கையிலும் இச்சாதனங்கள் இருக்கப்பாருங்கள். உங்கள்பின்னைகள் முன்னுக்குவருவதோடு உங்கள் தேசமும் விருத்தியாகும். இச்சாதனம் தினவர்த்தமானியாக வெளிவந்தபின்னர்தான் நீங்கள் தமிழ்ச்சாதியென மதிக்கப்படுவீர்கள். பிறசாதியாருடன் போட்டிபோடும் நீங்கள் இதைப்பற்றிச் சிந்தியாதது என்னே?

வெட்கமில்லையா. சகோதரரே, நியன்மீர் இப்பத்திரிகையை விருத்திபண்ணுவதற்கு என்னென்ன செய்யப்படவேண்டு மென்பதைப் பற்றி ஆலோசித்தற்கு நீங்கள் உங்களுக்குள் கூடித் திரயோசிக்கவேண்டும். செல்லாக்கு உள்ள காரியஸ்தர் சிலரைத் தெரிவுசெய்து ஆங்காங்கு உள்ளூர் புறவூர்களுக்கு அனுப்பினால் அநேக புதிய கையொப்ப நேயர்களைச் சேர்ப்பதோடு இதன்விருத்தியின் பொருட்டுப் பணமும் சேகரிக்க முடியும். உங்கள்முயற்சியும் இதில் சேரின் எண்ணியகருமம் இனிதில் சீக்கிரம் முடியும்.

நவீன "நவல்கள்" வாசிப்பதை நிறுத்தப் பண்ணுதற்கு உபாயம் இன்று மொன்றுளது. அது என்னவெனின் ஆனந்தத்தையும், அறிவையும் மனக்கிளர்ச்சியையும் உண்டாக்கும் விஷயங்கள் அடங்கிய ஓர் மாதாந்த சஞ்சிகையொன்றை நடத்துவதே. அதையும் இச்சபையார் சற்றே சிரமமெடுப்பின் நன்றாய் நடத்த முடியும்.

சிறந்த விஷயங்கள் அடங்கியபத்திரிகைகள் இப்போது அருகிவிட்டன. இப்போதையபத்திரிகைகள்யாவும் மனசுக்கு ஏதோ ஒருவகையான கிறுகிறுப்பையும் சஞ்சலத்தையும் கவலையையும் கொடுக்கும் விஷயங்களே நிரம்பியிருக்கின்றன. ஆன்மா சுடைத்தேலும் விஷயங்கள் ஒன்றையும் மூலைக்கு மூலைதேடிப் பார்ப்பினுங் காணோம். பின் என்ன? கேட்பீரா, "ஒற்றிவிபத்து" "மோட்டக்கார்விபத்து" கொலை விபசாரம், ஒருவரை ஒருவர் தூஷித்தல், சுத்திக்குத்து "ஒத்துழையாமை" யுத்தம், கப்பற்சேதம்" இவைகள்தான் இதெனனகலியின் கோலமா!

தனவான்களே! ஒன்றியோசித்துத் தக்க காரியஸ்தரைத் தெரிவுசெய்து ஆங்காங்கு அனுப்பி மேற்குறித்த நோக்கத்தை இனிது நிறைவேற்ற முன்வாருங்கள். ஈசன் அருள்புரிவாராக.

இங்ஙனம்,
காரை. M. S.

## யசுர்வேத உபாகரும நிச்சயம்.

யசுர்வேத உபாகருமத்துக்குரிய மாசம் சிராவணமேயென்றும் அம்மாசத்தில் வரும் பூரணையிலேயே யசுருபாகருமம் செய்யவேண்டுமென்றும், அந்தப் பூரணை சங்கிராந்தியால் அல்லது கிரகணத்தாற் குற்றமடைந்தகாலத்தில்மாத்திரம் அதனைத் தவிர்த்து, அடுத்த (பாத்திரபத) பூரணையிற் செய்யவேண்டுமென்றும், அதுவும் அவற்றாற் குற்றமடையின் குற்றத்தைச் சிந்தியாது உரிய சிராவணமாச பூரணையிற்றானே செய்யவேண்டுமென்றும் ஸ்மிருதி கிருஹ்யசூத்திரம் சோதிடம் முதலிய பல நூல்கள் விதிக்கின்றன. அவற்றினுட்கிடையை உள்ளவாறே யுணர்ந்த நிர்ணயசிந்து முதலிய சங்கிரககாரர் பலரும் அவ்வாறே நிச்சயித்திருக்கின்றனர். சில சங்கிரககாரர் குரு சுக்கிரன் சாகாதிபன் இவர்களுடைய அஸ்தமனத்தையுங் குற்றமென்று சில நூற்பிரமாணங்களைக் காட்டி நாட்டினர். அவர்கள் அவ்வஸ்தமனங்களிற் சாகாதிபனுடைய அஸ்தமனம் வலியுள்ள ஒரு குற்றமென்று காட்டத் தொடங்கி முன்னொடு பின் முரணி யிடரப்பட்டனர்.

ஒரு கிரகம் அஸ்தமனமாக மற்றைக் கிரகம் பலமடைந்திருப்பின் அஸ்தமனதோஷமில்லையென்னுங் கருத்தமைந்த பிரமாணத்தையும் அவர்களே எடுத்துக் காட்டியிருக்கின்றார்கள். ஆடிமாசத்துக்கு அதிங்காரக்கன் தெற்பயிர் உண்டாகப்பெறுதகாலம் என்னுமிருகுற்றங்கள் அந்நூல்களாலும் பெறப்படுகின்றன. ஆகவின் இவ்வருடத்தில் ஆவணிமாதப் பூரணையில் யசுருபாகருமங் கொள்வது எல்லா நூற்கு மொத்த துணிபாய் முடியும். வியாழன் கட்புலிடாகிய துலாராசியிலிருப்பதாற் சுக்கிரனுடைய அஸ்தமனதோஷம் நீங்கும். ஆடி எல்லாச் சாகையுடையார்க்கும் பொதுவாக விதிக்கப்பட்ட மாசமுமன்று. யசுர்வேதத்திற் சிலசாகையினர்க்கே கௌண காலமாய்ச் சொல்லப்பட்டது.

ஆதலின் இவ்வருடத்தில் ஆவணிமாசத்தில் வரும் (சிராவண) பூரணையில் யசுர்வேத பிரதமருதீர்யாதி யுபாகருமங்களெல்லாம் செய்யத்தக்கன. பிரதமோபாகருமத்தை மாத்திரம் சாந்திபூர்வமாகச் செய்யலாம். இவற்றினுண்மையை ஐயமறத் தெளிய விரும்புவோர் தமக்குண்டான ஐயங்களை எமக்காவது அறிவிற் சிறந்த பிறருக்காவது உணர்த்தி நேரிற் பேசித் தெளிந்துகொள்வதே கடன். பஞ்சாங்கத்தில் அச்சிட்டதற்காக அல்லது படித்ததற்காக எவரெனர் எந்த எந்தப் பத்திரத்தில் எந்த எந்த மூலையில் எதை எதை விதியுகின்றார்களென்று தேடிப் பார்த்து விடை யெழுதிக்கொண்டிருப்பது எமக்கு அல்லது எம்போல்வோர்க்குச் சட்டப்பாடாகாது. அப்படி எழுதாமையினுல் எங்கள் பஞ்சாங்கம் அல்லது கோட்பாடு தலைகுப்விடுமென்றும் நினைக்கலாகாது. இந்த நிர்ணயம் பதினொருமுறைமா யெழுதி விரைவில் முடிக்கத்தக்கதுமன்று.

ச. சுப்பிரமணியசாஸ்திரிகள்,
பஞ்சாங்க கணிதர்,
பருத்தித்துறை.

## கள்ளுக்குத்தகை விற்பனவு.

### கள்ளுக்குத்தகை கோள்வதற்கு கேள்வி பத்திரம் அழைக்கும் அறிவித்தல்.

1923-ம் ஆண்டு ஆடி மாதம் 1-ந் திகதி முதல் 1924-ம் ஆண்டு ஆனி மாதம் 30-ந் திகதி வரை 12 மாத காலத்திற்கு யாழ்ப்பாண பட்டினத்தைச்சேர்ந்த பின்னுற் காணப்படும் அட்டவணையில் விபரிக்கப்பட்டிருக்கும் கள்ளுக்குத்தகைகள் கொள்வதற்கு இத்தால் கேள்விபத்திரங்கள் அழைக்கப்படுகின்றன.

2. "கள்ளுக்குத்தகைக் கேள்விப்பத்திரம்" என மேல் எழுதப்பட்டு லாக்கிரி மெழுகால் முத்திரையிடப்பட்ட உறைக் காகிதங்களில் போடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் வடமாகாண அரசாட்சி ஏசன்றருக்கு மேல்விலாசமிடப்பட்டு யாழ்ப்பாணம் கச்சேரியில் 1923ஆ ஆனி௴ 18௳ திங்கட்கிழமை பகல் 12 மணி நேரத்துக்குப் பிந்தாமல் வந்து சேரவேண்டும். கேள்விக்காரர் அத்தருணம் இக்கச்சேரியில் சமுகமாயிருக்கவேண்டும்.

3. அரசாட்சி ஏசன்றர் தன் மனத்திற்குச் சரியென்றபடி யாதாயினு மொரு கேள்விப்பத்திரத்தை ஏற்றுக்கொள்ளாது மறுத்துவிடும் அதிகார முடையவராவர். இவ்வதிகாரத்துக்குள்ளமையக்கூடிய கேள்விக்காரன் குத்தகையைப் பெற்று அவ்வுருத்தின் நிபந்தனைகளைக் கைக்கொண்டு அவற்றின் பிரகாரம் நடக்கக் கடவன். இரண்டு அல்லது மேற்பட்ட கேள்விகள் சமமாயிருப்பின் அல்லது திருப்திகரமான கேள்விகளில்லாவிடின் அரசாட்சி ஏசன்றர் குத்தகைகளைப் பிரசித்த ஏலவிற்பனையில் உடனே விடலாம்.

4. குத்தகையைக் கொண்ட கேள்விக்காரன் உடனே அரசாட்சி ஏசன்றரிடம் பிணைப் பணமாகக் குத்தகையின் இரண்டு மாதக் குத்தகையளவு ஓர் தொகையை உடனே கட்டி விற்பனவின் நிருவாகங்களையும் பொருத்தத்தையும் தேவையான முத்திரை கொடுத்துக் கையொப்பமிட்டு நிறைவேற்றிக்கொள்ள வேண்டியது.

5. விற்பனையின் நிருவாகங்களையும் வேறும் வேண்டிய விபரங்களையும் அறியவிரும்புவோர் யாழ்ப்பாணம் கச்சேரியில் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

6. அரசாட்சியாரிடம் ஒப்பந்தம் எடுத்து அவ்வொப்பந்தத்தை நிறைவேற்றத் தவறியவர்களுடைய டாப்பில் தனித்தேனும் மற்றவர்களுடன் ஒருமித்தேனும் காணப்படும் பேர்வழிகாருடைய ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அன்றியும் ஒப்பந்தக்காரன் அந்த இடாப்பிலுள்ளவர்களில் யாரையாவது அல்லது வடமாகாண அரசாட்சி ஏசன்றர் தமக்குப் போதியதெனக் கண்ட நியாயங்களை எழுத்தில் கொடுத்துத் தடைசெய்திசு கொடுப்பின் அப்படித் தடைசெய்யப்பட்டவரைத் தம் ஊழியத்தில் உபயோகிக்கப்படாது.

7. யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள எல்லாக் கள்ளுத்தவறணைகளிலுமிருந்து கள்ளுவாங்கி வெளியே கொண்டுபோவதைத் தடுக்கப்படும்.

R. Y. DANIEL,
வடமாகாண அரசாட்சி ஏசன்றருக்காக.

யாழ்ப்பாணம் கச்சேரி,
1923௵ ஆனி௴ 11௳. (G. 301.)

அட்டவணை.

| இல. | பிரிவு. | இடம். |
|---|---|---|
| 5 | யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணைதென்கிழக்கு | (ஆரியகுளம்) |
| 14 | வடமராட்சி மேற்கு | புலோலிதெற்கு |
| 15 | ,, | வராத்துப்பளை |

## அறிவித்தல்.

கோலாலம்பூரிலிருந்து யாழ்ப்பாணம் கொட்டைக்காட்டிற்குக் கொண்டுவந்த எனது வேலைகாரப் பெண், பெயர் மங்களம்மாள், வயது ஏறக்குறைய 11, பொது நிறம். இவளை ஆரோ மொற்றிக் கூட்டிக்கொண்டு போய்விட்டார்கள். கண்டுபிடித்து, அல்லது யாழ்ப்பாணம் பொலீஸில் அறிவித்து, வழிவகைகாட்டிக் கொடுப்போருக்கு இருபத்தைந்துரூபா இனும். இதைப்பற்றி எனக்கு நேரில் காகிதம் எழுதி அறிவித்தால் நான் சங்கதியை வெளியிடாமல் கண்டுபிடித்தவுடன் இருபத்தைந்து ரூபா அனுப்புவேன்.

இங்ஙனம்,
சு. வயித்திலிங்கம்,
தொல்புரம்,
யாழ்ப்பாணம்.

(Mis. 338.)

## ஸ்ராண்டேர்ட் கொளுக்கியோடுகள்.

### Standard Tiles.

இவை வேரேக் என்னுமிடத்திலுள்ள ஸ்ராண்டேர்ட் ஓட்டுக் கம்பனியாராற் செய்யப்படுவன.

இவ்வோடுகள் இக்காலத்திலுள்ள மற்றைய ஓடுகளைக்காட்டிலும் திறமானவையும் மலிவானவையும் இலேசானவையும் நீடித்தகாலத்திற்கு நின்று பிடிக்கத்தக்கனவுமாகும். இந்த ஓடுகளே இலங்கையிலும் இந்தியாவிலும் இக்காலத்தில் அதிகமாக உபயோகிக்கப் படுகின்றன. இவைகள் (வேயப்பட்ட வீட்டில் வசிப்போருக்கு) குளிர்மையையும் தேகாரோக்கியத்தையுங் கொடுக்கத்தக்கனவாயும் எவ்விஷயத்திலும், ஏனையஓடுகளிலுஞ் சிறந்தனவாயுமிருக்கின்றன. யாழ்ப்பாணத்திலுள்ள சிறந்த கல்லூரிகளுக்கு இவ்வோடே உபயோகிக்கப்பட்டுள்ளன மற்றும் ஓடுகளை வாங்குதற்கு முன் இதனையும் ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள். விரும்புவோர் யாழ்ப்பாணத்திலேனும் வல்வெட்டித்துறையிலேனும் பருத்தித்துறையிலேனும் S. வீரகத்திப்பிள்ளையிடம் பெற்றுக்கொள்ளலாம். (H. 18.)

## தொல்காப்பியம்.

எழுத்ததிகாரம்:—நச்சினார்க்கினியம் திரு-கா. சுப்பிரமணியபிள்ளை M. A. M.L அவர்கள் எழுதிய விரிவான முகவுரையுடன் ரூ—4—00.

சொல்லதிகாரம்:—சேனாவரையம் ரூ—3-8.

குறிப்பு:—இவை பாடபேதங்களும், திருத்தங்களும், மேற்கோள் குறிப்பு விளக்கமும், பெற்றன. சிமைக்கட்டடமுடையது.

சிவஞானசித்தியார் இருவருரை ரூ—4—0.

திருவாரூர் புராண மூலம் குறிப்புரையுடன் ரூ—0—8.

திருவாசக விரிவுரை முதற்பாகம் ரூ—5—0.

விரிவான புத்தகவிளம்பரம் இனும்.

செந்தமிழ்ச்செல்வி ஆபீஸ்,
306, லிங்கசெட்டித்தெரு, சென்னை.

(Mis. 306)

## அடைவு நகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று வண்-கிழக்கில் அடைவுபிடிக்கும் கூ. கண. க. நா. சொ. மூத்தையாசெட்டியிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி ஷைசட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:—

| ௳ | ௴ | நம். | ரூ. | ஊர் பெயர் | நகை விபரம். |
|---|---|---|---|---|---|
| | 1921ம் ஆ | | | | |
| 17 | 12 | 3695 | 40 | வண்கிழக்கு கா. கந்தசாமிப்பத்தர் | பொன் சாதாமோதிரம் 1 |
| 20 | 12 | 3706 | 31 | வண்மேற்கு சி. சுக்லதயாப்பத்தர் | பொன் வெள்ளியுடன் கல் கொண்டைப்பூ 1 |
| | 1922ம் ஆ | | | | |
| 21 | 1 | 3763 | 300 | பறங்கித்தெரு வை. இரப்பியல் | பொன் தாயத்து 2ம் த. அரைப்பவுண் 2ம் முழுப்பவுண் 1ம் கோர்த்த சங்கிலிக்கொடி 1 |
| 23 | 1 | 3772 | 150 | மண்டதீவு ஆ. சிவகுரு | பொன் அவலமாலை 1ம் கல்க்கவுத்தோர் 1ம் கெவுட்டு முன் முகப்பு 1 |
| 23 | 1 | 3775 | 100 | பறங்கித்தெரு வை. இரப்பியல் | பொன் கல்பதக்கத்துடன் கிளிக்காஸ் அட்டியல் 1 |
| 25 | 1 | 3778 | 36 | நல்லூர் பெ. சி. ராசய்யா | பொன் கல்க்கவுத்தோர் 1ம் டைபதக்கம் 1 |
| 25 | 1 | 3779 | 75 | பறங்கித்தெரு சே. சவுரிமுத்து | பொன் பட்டணக்காப்புச் சோடி 1 |
| 1 | 2 | 3805 | 150 | வண்கிழக்கு வி. சுந்தரப்பிள்ளை | பொன் கெட்டிப்பூரானட்டியல் 1 |
| 12 | 2 | 3828 | 32 | கொக்குவில் செ. பொன்னையா | பொன் தாயித்து 1 |
| 13 | 2 | 3832 | 20 | ஆரியகுளத்தடி ஆ. சுந்தரம் | வெள்ளிப் பாதசரம் 1 |
| 13 | 2 | 3834 | 125 | மண்டதீவு ஆ. சிவகுரு | பொன் கெட்டிக் கொலுசு சோடி 1 |
| 27 | 2 | 3890 | 26 | வண்மேற்கு ச. நாகலிங்கம் | பொன் கல்க்கட்டிய வெள்ளியுடன் கொண்டைப்பூ 1 |
| 11 | 3 | 3931 | 50 | வண்கிழக்கு மு. சிவகுருநாதர் | பொன் ஒரு கல் விழுந்த வெள்ளியுடன் கல்க்கொண்டைப்பூ 2 |
| 19 | 3 | 3961 | 15 | தட்டாதெரு சி. தாமோதிரம்பிள்ளை | பொன் கல்க்கட்டிய குருசு 1ம் சாதாப்பூ 1 |
| 21 | 3 | 3968 | 20 | வண்கிழக்கு மு. சிவகுருநாதர் | பொன் திருகில்லாத கல்க்கடுக்கன் சோடி 1 |
| 27 | 3 | 3997 | 250 | நல்லூர் ஆ. வைத்திலிங்கம் | பொன் பிரான்சுக்காசு2கோர்த்த சங்கிலிக்கொடி 1 |
| 12 | 4 | 4073 | 12 | நல்லூர் பெ. சி. ராசய்யா | பொன் ஒரு கல் கட்டிய புரோசசு 1 |
| 22 | 4 | 4102 | 120 | நாவற்குளி தம்பு பொன்னம்பலம் | பொன் ஒன்றில் கல்பதக்கத்துடன் கம்பிப் பூரானட்டியல் 2 |
| 24 | 4 | 4107 | 40 | ஆரியகுளத்தடி அ. ஆறுமுகம் | பொன் சாட்டட்டியல் 1 |
| 3 | 5 | 4147 | 120 | வண்கிழக்கு பொ. செல்லையா | பொன் கல்பதக்கத்துடன் கெட்டிப்பூரானட்டியல் 1 |
| 13 | 5 | 4189 | 75 | கந்தர்மடம் வி. ஆறுமுகம் | பொன் பட்டணக்காப்பு சோடி 1 |
| 15 | 5 | 4194 | 40 | கொட்டடி ராம. வீரகத்தி | பொன் கல்பதக்கத்துடன் சிறு கம்பிப் பூரானட்டியல் 1 |
| 20 | 5 | 4226 | 35 | உசன் வி. தம்பையா | பொன் தாலிக்கொடியிற் கோர்க்கிற குருகுமணிபூ உருப்படி 22 |
| 23 | 5 | 4254 | 25 | கந்தர்மடம் வ. கதிர்வேலு | பொன் தாயத்து 1ம் வெள்ளிப் பாதசரம் சோடி 1 |
| 25 | 5 | 4260 | 70 | வட்டுக்கோட்டை பொ. மயில்வாகனம் | பொன் கம்பிப்பூரானட்டியல் 1ம் மூன்று கல் விழுந்த மோதிரம் 2 |

விற்பனவு:—ருதிரோத்காரி வருஷம் ஆனி௴ 2௳ (16-6 23) சனிக்கிழமை பகல் 10 மணி தொடக்கம் எடுபட்ட நகைகள் புரக்கலாக ஷை கடையில் பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

அரு. செல்லையா உடையார்,
வெர்நிகுமேஸ்தா.

(Mis. 337.)

Telegrams: "APPANNA', Bangalore City'

## கெ. தி. அப்பண்ணு & கம்பெனி,

பெங்களூர் நகர்,
(இந்தியா).

### பிரசித்திபெற்ற மைசூர் ஊதுவத்திகள்.

ரூ. அ. பை.

பன்னீர்வத்திகள் சேர் 1க்கு விலை 0-12-0 முதல் ரூபா 2-0-0 வரை.

புனுகுவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா 1-8-0 முதல் ரூபா 4-0-0 வரை.

மத்தாப்புவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா 1-8-0 முதல் ரூபா 3-0-0 வரை.

ஜவ்வாதுவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா 5-0-0 முதல் ரூபா 7-0-0 வரை.

கஸ்தூரிவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா 5-0-0 முதல் ரூபா 12-0-0 வரை.

அம்பர்வத்திகள் சேர் 1க்கு விலை ரூபா 1-8-0 முதல் ரூபா 20-0-0 வரை.

வாசனைவில்லைகள் வில்லை 1க்கு விலை ரூ. 0-4-0 முதல் ரூபா 5-0-0 வரை.

புனுகு தோலா 1க்கு விலை ரூபா 10-0-0 முதல் ரூபா 12-0-0 வரை.

தசாங்கம் சேர் 1க்கு விலை ரூபா 2-0-0 முதல் ரூபா 3-0-0 வரை.

### கூந்தல் வளருந் தைலம்.

டில் மோஹினி ஹேர்ஆயில்புட்டி 1க்கு 0-12-0. டஜன் 1க்கு 8-0-0.

ஜாஸ்மின் ஹேர் ஆயில் புட்டி 1க்கு 0-12-0. டஜன் 1க்கு 8-0-0

பளவர் பஹார் ஹேர் ஆயில் புட்டி 1க்கு 0-12-0. டஜன் 1க்கு 8-0-0.

கமலா ஹேர் ஆயில் புட்டி 1க்கு 0-12-0. டஜன் 1க்கு 8-0-0.

### ஓட்டோ வாஸனை வெண்டுகள்.

ஒரு கிராம் கொண்ட சிறியபாட்டல்கள் டஜன் 1க்கு விலை ரூபா 6-0-0

### சந்தன சோப்புகள்.

டஜன் 1க்கு ... ... ரூபா 6-0-0

### சந்தன மரத்தூள்.

பவுண்டு 1க்கு ... ... விலை ரூபா 1-8-0

தங்களுக்குத் தேவையான வாசனைத் திரவியங்களுக்கு உடனே எழுதுங்கள்.

Address:—
K. T. APPANNAH & Co,
Bangalore City.
(INDIA).

(Y. 16.)

## காசிநாடாசேலை.

16 முழ் நீளம்; $2\frac{1}{2}$ முழ அகலம்.

இந்தச் சேலைகள் வெள்ளை மல்லில் சிவப்பு, கறுப்புச்சேர்ந்த சாக்லெட் நிறம் போல், பூக்கள் புட்டாக்கள் போட்டு, சுற்றிலும் எழுத்துவேலையில் கரைகட்டியிருக்கும். இது புதுமாதிரி. இதுவரைக்கும் தயாரானதில்லை. விலை ரூபா 5—8—0.

## வெள்ளிக்கெண்டைச்சால்வை.

$5\frac{1}{2}$ முழ நீளம்; $2\frac{1}{2}$ முழ அகலம்.

இது மிகவும் நேர்த்தியாகவும் பளபளப்பாகவும் கைஸ் நூலினுல் நெய்யப்பட்டதுமான சால்வை.

ஒரு இஞ்சு வெள்ளிக் கெண்டைப் பட்டையுள்ளது. விலை ரூபா 7—0—0.

விலாசம்:
கனக அண்டு கம்பெனி,
பார்க்டவுன் போஸ்ட், மதராஸ்

(Y. 18.)

## புத்தக விளம்பரம்.

தெல்லிப்பழை பிரம்மஸ்ரீ வித்துவான். சிவானந்தையரால், இயற்றிய புத்தகங்கள் என்னிடத்தில்பெற்றுக்கொள்ளலாம்.

1. தருக்கசங்கிரகம், நியாயபோதினி, பதகிருத்தியம், அன்னம்பட்டியம், நீலகண்டீயம் சேர்ந்த கட்டு விலை ரூபா 2-00
2. நம்பி அகப்பொருள்ளுரை ,, 1-00
3. நவக்கிரக கவசம் விலை அணு 1
4. சனிதுதி ,, ,, 1
5. தஷகாரியம் ,, ,, 5
6. இரகுவம்சம் மூலமும் உரையும் (முதற்பாகம்) 1-50

க. செல்லையாஐயர்,
சிவன்கோவில் வடக்குத்தெரு,
வண்ணார்பண்ணை.

Y. 14.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva prakasa Press, Jaffna